SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 16. TML1155 - சுகிர்தராணி கவிதைகளில் தலித் பெண்ணியம்

ஆய்வாளர் : செள.சினேகா
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திண்டல், ஈரோடு–12

நெறியாளர்: முனைவர். கி.பே.மோகனாம்பிகா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திண்டல், ஈரோடு–12.

**ஆய்வு சுருக்கம்**

*இலக்கியம் தொடங்கிய காலத்தில் இருந்தே பெண்ணுரிமை, பெண் விடுதலை பேசப்பட்டாலும் நவீன இலக்கியத்திலேயே அது முதன்மைபடுத்தப் பெற்றது எனலாம். பெண்ணியச் சிந்தனையும் பெண் சமத்துவமும் முக்கியமாய் கவிதைகளில் கையாளப்பட்டன. பெண்ணியப் படைப்பாளிகளின் தர்க்கரீதியான படைப்புகள் பெண்ணுக்கான குரலாக ஓங்கி ஒலிக்கிறது. பெண் படைப்பாளிகளால் தான் பெண்ணின் உணர்வுகளை புரிந்துகொண்டு படைக்கமுடியும் என்பது உண்மையாகவே உள்ளது. அவர்கள் தங்கள் மீதான ஒடுக்கு முறைகளை, அல்லது சமூக அங்கீகரிப்பை நேரடியாக அனுபவிப்பதன் மூலம், நேரடித் தாக்குதல்களுக்கு உள்ளாகும்போது உண்மையான வலியை உணர்கின்றனர். அந்த வலியை கேட்டுப்பெரும் அல்லது பார்த்து அறியும் ஆண் படைப்பாளிகளால் முழு தாக்கத்தோடு வழங்க முடியாமல் போகலாம் என்ற கூற்று உண்மையாகக் கூட இருக்கலாம் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. கவிதைகளின் வழியாக பெண்ணிய எழுத்தாளர்கள் தங்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளனர். தலித் பெண்களின் இன்னல்களையும் சமூகத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களாக புறந்தள்ளி வைத்துள்ளதை குறித்தும் சுகிர்தராணி கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ள விதத்தை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

*திறவுச்சொற்கள்: முதிர்கன்னி, வன்புணர்வு, போராட்டம், தீர்வு , தலித் பெண்கள், துயரம், சாதி, சமூக நிலை*

**முன்னுரை:**

*பாரதியால் துவக்கப்பட்ட நவீன கவிதை மொழி, வடிவம், கருத்தியல் என அனைத்து பரிமாணங்களிலும் மாற்றமடைந்த ஒன்றாகும். சங்கக் கவிதைகளிலும் பின்னர் வந்த பக்திக் கவிதைகளிலும் பெண்ணால் எழுதப்பட்ட கவிதையும் பெண்ணைப் பற்றி எழுதிய கவிதைகளும் பல உள்ளன. இருப்பினும் சமூகத்தில் பெண்ணுக்கான இருப்பு, சிக்கல்கள், மன உணர்வுகளை வெளிப்படையாகப் பேசிய கவிதை வரலாறு ஆண்டாளின் கவிதைகளிலே முறையாகத் தொடங்கியது எனலாம். மேலும் நவீன கவிதைகளிலேயே வளர்ச்சியைக் கண்டன என குறிப்பிடலாம். பெண்களின் எழுச்சியால் பெண்ணியச் சிந்தனைகள் உலகில் தோன்றின என்பதும், பெண்ணிய அமைப்புகளின் உருவாக்கம் மற்றும் அதன் சிந்தனை, செயல் வளர்ச்சியால் பெண்கள் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றனர் என்பது நம் அறிந்த செய்தியே ஆகும். இதன் ஓரங்கமாகத்தான் பெண்கள் எழுத துவங்கினார்கள் என்றால் அது மிகையல்ல. இன்றைய நவீனச் சூழலில் தலித் பெண்களுக்கு எதிராக குரல் எழுப்பிய சுகிர்தராணி கவிதைகளில் தலித் பெண்ணியம் குறித்து ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**பெண்ணிய விளக்கம்:**

"Feminism" *என்ற ஆங்கிலச் சொல்* 'Femina' *என்ற இலத்தீன் சொல்லிருந்து மருவி வந்தாகும்.* 'Femina' *என்ற சொல்லுக்கு 'பெண்களின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள' என்பது பொருளாகும்.*

*1889 வரை* 'Womanism' *என்ற சொல் பெண்களின் உரிமை பிரச்சனையும் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன்முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. ஆக்ஸ்போர்ட் அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை அவர்கள் சார்பாக வாதாடுவது அல்லது போராடுவது*

*என்ற பொருளைத் தந்தது. 'Womanism' என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் முலம் அர்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தவர் 'ரேஸ்ரேசோ' என்ற பெண்மணி ஆவார்."1*

**சுகிர்தராணி குறிப்பு:**

*கவிஞர் சுகிர்தராணி, இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை நகரத்திற்கு அருகில் உள்ள இலாலாப்பேட்டை என்னும் கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தாயார் தவமணி, தந்தை – சண்முகம் என்பவர்களாவர். கவிஞர் சுகிர்தராணி, இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கத்தில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். பொருளாதாரம் மற்றும் தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். சமகால தலித் மற்றும் தமிழ் இலக்கியத்திற்காக இவர் நன்கு அறியப்படுகிறார்.*

**விருதுகள்:**

- *தேவமகள் கவிதூவி விருது*
- *பெண்கள் முன்னணியின் சாதனையாளர் விருது*
- *புதுமைப்பித்தன் நினைவு விருது*
- *2020 ஆம் ஆண்டிற்கான விளக்கு விருது*

*போன்ற பல விருதுகளை அவரது படைப்புகளுக்காகப் பெற்றுள்ளார்.*

**படைப்புகள்:**

- *கைபற்றி யென் கனவு கேள்*
- *இரவு மிருகம்*
- *காமத்திப்பூ*
- *தீண்டப்படாத முத்தம்*
- *அவளை மொழிபெயர்த்தல்*
- *இப்படிக்கு ஏவாள்*
- *நீர் வளர் ஆம்பல்*
- *சுகிர்தராணி கவிதைகள் (1996 – 2016)*

**தலித் பெண்ணியம்:**

*"தலித் பெண்ணியம் என்பது தலித் பெண்களது விடுதலைக்கும், சுரண்டலுக்கும், ஆதிக்க அரசியலுக்கும் எதிரான மீட்சிக்கும் மேற்கொள்ளப்படும் விடுதலைச் செயல்பாடுகளைக் கொண்டது"2 என்கிறார்.*

*கத்தரிக்கப்பட்ட மயிர் என்ற கவிதையில் ஆணை குப்புற கவிழ்த்தி பெண்ணை நிலை நிறுத்தும் வரிகள் பெண் சமூகத்தின் கனல்பொறிகளாக இனங்காணத்தக்கது. இந்த நிலம் ஆறு, வனாந்திரம், மொழி பனியாறு, பாலை, எரிமலை, புல்வெளி, பறவைகள், விலங்குகள், மழை, வானம், உடல் நீரூற்று, நிர்வாணம், காமம், கடல் ஸர்ப்பம், பள்ளத்தாக்கு, பரிசுத்தம் எல்லாமே என்னுடையவை என்று இந்த உலகையே பெண்ணுக்கான உலகாக ஒரு தலித்துக்கான உலகாக மாற்றிக்காட்டுகிறார்.*

"எல்லாம் என்னுடையவை
கத்தரிக்கப்பட்ட மயிர்
மண்ணில் மக்குவதில்லை"3

*மேலும் தோல் பிதுக்கப்படாத குறி என்ற கவிதையினையும் வன்புணர்ச்சிக்கு எதிராக முன்வைக்கின்றார். இந்தியாவைப் பொறுத்தமட்டில் பெண்ணுக்கு எதிரான வன்புணர்வு நிகழ்வு இன்று அதிகமாகிக் கொண்டே வருகிறது. அது குழந்தைகள், முதியவர்கள் என்ற வயது பாகுபாடுகளைத் தாண்டி ஆண்களால் காமவெறியற்களால் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் தினமும் அறிந்த வண்ணம் இருக்கிறோம்.*

*"ஒரு காலத்தில் கள்ளிப்பாலுக்கு இரையான பெண்குழந்தைகள் அடுத்து தாயின் கருவறையிலேயே அழிக்கப்பட்டன. ஆனால் அதைவிடக் கொடுமை இன்று பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு பலிகடாவாக்கப்படுகின்றனர். இதையெல்லாம் தினம் பார்க்கும் இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையான ஒரு சாமான்யர் பெண் குழந்தைகள் பிறப்பது தவறா? அல்லது அவர்கள் இந்த சமுதாயத்தில் வளர்வது தவறா? என்று கேள்வி கேட்கிறார் வேதனையுடன் ஆம் அவர் சொல்வதில் உண்மை இருக்கத்தானே செய்கிறது. இன்றைய குழந்தைகளைப் பொறுத்தவரை ஏதோ ஒரு வகையில்,*

*பெரும்பாலும் உடல், உணர்வு பாலியல் ரீதியான தொந்தரவுகளை அதிகம் சந்திக்கின்றனர். பள்ளிக்கு, பக்கத்துவிட்டுக்கு என சுதந்திரமாகக்கூட செல்லமுடியாத நிலையல்லவா இன்று உருவாகி விட்டது"4. என்பது சமகால சமூக நிலையைப் பிரதிபலிக்கிறது. இதனையும் இதற்கான தீர்வையுமே தனது கவிதையில் மொழியாக்கியிருக்கிறார் சுகிர்தராணி,*

"காற்று உறங்கும் நள்ளிரவு
அலரிப்பூக்கள் அவிழ்ந்திருக்கும் இடுகாட்டில்
பெண்ணுடலைத் தோண்டியெடுத்துப் புணர்பவன்
சருகுகள் தேங்கும் அரவமற்ற சாலையில்
இறகெனப் பறக்கும்
மனநலம் வாய்க்காத பெண்ணொருத்தியைப்
புதருக்குள் வல்லுறவு செய்பவன்
தளிர்நடை அகலாக் குழந்தைகளைப்
புழங்காத அறையொன்றில்
வாய்பொத்தி உயிர் உறுப்பைத் திணிப்பவன்
அனைவரையும் நிர்வாணமாய்க்
கருங்கல் வெளியில் நிறுத்தியிருக்கிறேன்"5

*என்னும் கவிதை பதிவு செய்கிறது.*

*புயல் சின்னம் என்ற கவிதை தலித் பெண்களுக்கு நேரிடுகின்ற பாலியல் சுரண்டலை, அத்துமீறலை எதிர்கொண்டு பேசுகிறது. கவிதையில், தன் உடலையே ஆயுதமாக்குகிறார். மயிர்கள் சிரைக்கப் படாத தனது நிர்வாணத்தை அழிக்கப்படாத கம்பீரம் நிறைந்த காடுகளோடு ஒப்புமைப்படுத்துகின்றார். இதனையே நாம் தலித் பெண்ணிய மொழியாக இனங்காண்கிறோம். தலித்பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் சுரண்டலை அடையாளப்படுத்துகின்ற போது,*

"இயற்கையின் பிஞ்சு நிறத்தில்
ஆழ்ந்துகிடக்கும் என்னுடலை
தூர நின்ற கவட்டுக் குச்சியால்
கிளறிப் பார்க்கிறாய்"6

*என்கிறார்.*

*'என் கிராமத்தின் ஓவியம்' எனும் கவிதையிலும் கவிஞர் தாம் அனுபவித்த, தம் மக்கள் அனுபவித்த சாதியின் வலியை எடுத்துரைக்கின்றார். பெரும்பறைக் குன்றுகள் சூழ்ந்த என் வெப்ப முற்ற நிலங்கள் புவியதிர்ச்சியின் வெடிப்பினைப் போல பிளவுற்றிருப் பதை எப்படி சகிப்பேன் என கேள்வி எழுப்பும் கவிஞர்,*

"எட்டாத தொலைவில் நின்று
பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்
உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி
காலணிகளற்ற பாதங்களை நனைக்க
என் கிராமத்தின் ஓவியம்
தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது
ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்"7

*என்பதாய் சாதிய ஒடுக்குமுறையின் அவலத்தை ஒரு சித்திரமாய் காட்சிப்படுத்துகின்றார்.*

**சமூக நிலை:**

*"இலக்கியம் என்ன செய்கிறது. ஒரு சமூகப் பழக்கம் என்ற அளவில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராயும் போது முரண்பாடுகளை அகற்ற இயலாத மிகக்கடினமான வாதங்களை எதிர்கொள்கிறோம் காரணம் இலக்கியத்துக்கு வழங்கப்பட்டுள்ள செயல்பாடுகள் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை இலக்கியம் மனித நேயத்திற்கான கருவி என்ற மென்மையான நோக்கு முதல் அது அரசியல் போராட்டத்துக்கான கருத்தியலுக்கான கருவி என்ற தீவிரமான நோக்கு வரை பல்வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன"8 என்பார் க.பூரணச்சந்திரன். இவர் குறிப்பிடுகின்ற அரசியல் எழுத்தினை நாம் சுகிர்தராணியின் கவிதைகளில் கண்டடைய முடியும் ஏனெனில் அவர் அடிப்படையில் ஒரு தலித் போராளியாகவும் இரண்டாம் பட்சமாக ஒரு பெண்ணியப் போராளியாகவும் தம்மை தம் எழுத்துக்களில் வெளிப்படுத்திக் கொள்பவர் என்பதை நம்மால் அறியமுடிகிறது. இது ஒரு நிலை இன்னொரு நிலையாகக் குறிப்பிட்டிருப்பதைப் போலவே பார்க்கிறபோது நாம் ஏற்கனவே படைப்புக்கும் படைப்பாளிக்கும்*

*சமூகத்துக்குமான நெருங்கிய ஒரு உறவு உள்ளது அதனை சுகிர்தராணி எப்படி புரிந்து கொண்டு தம் படைப்பில் விமர்சனப்படுத்துகிறார் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகிறது. ஏனெனில் அடிப்படையாகவே சுகிர்தராணியின் கவிதை இந்த சமூகத்தின் ஒடுக்கு முறைகளுக்கும் அதிகாரத்துக்கும் எதிரான ஒன்றாக விளங்குகிறது.*

*சமூகப் பார்வையில் எழுதப்பட்ட கவிதைகளில் யாதும் ஊரே யாவரும் கேளிர் கவிதை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. கணியன் பூங்குன்றனரால் பாடப்பட்டதாக அறியப்படும் இக்கவிதை வரிகள் உலகெங்கும் உள்ள மக்களை அன்பு எனும் சொல்லால் இணைக்க முற்பட்ட ஒன்றாகும். ஆனால் இன்று உலகெங்கும் அதிகாரம் என்ற ஒன்றைக் கொண்டு இயலாதவர்கள் மீது சாதி, மதம், மொழி, இனம், நிறம் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் வன்மத்தை அவிழ்த்து விடுகின்ற செயலைச் சுட்டுவதாக முரண்பட்ட நிலையில் கவிஞர் சுகிர்தராணி இந்த தலைப்பில் ஒரு கவிதையினை நம் பார்வைக்கு வழங்கியுள்ளார். இது சமூக வரலாற்றின் இருள் படர்ந்த இன்னொரு முகத்தை நமக்கு காட்டுவதாக உள்ளது.*

''குருதி உறைந்த வாய்க்கால்களை
மனிதம் வறண்ட வதைக்கூடங்களை
பச்சையமற்ற முகாம்களை
எவற்றையும் புனரமைக்கலாம்
இடிக்கப்பட்ட கட்டடங்களை
எரிக்கப்பட்ட குடில்களை
குண்டு துளைத்த யன்னல்களை
எப்போதும் அஞ்சலி செலுத்தலாம்
புதை மேடுகளில் புல் முளைத்தபின்
எம்மொழியையும் கதைக்கலாம்''9

*என்பதாக சொல்லப்படும் கவிதை மொழியில் பரவிக்கிடக்கும் வன்மக்காட்சிகள் நம் கண்முன் விரிக்கப்படுகின்றது*

*சுகிர்தராணியின் பெரும்பான்மையான இரவுகள் விடிவதில்லை கவிதை பகல், இரவு என பிரிக்கப்பட்டுக் கிடக்கும் இவ்இயற்கையில் வாழும் விலங்குகளும், மனிதர்களும் பகலுக்கு தேவையானவையாகவும் இரவுக்குத் தேவையானவையாகவும் சிலவற்றை பிரித்து அணுகுகிறது. அப்படி பிரித்து பார்க்கின்ற இந்த சமூகத்தில் ஒரு பெண் இரவுக்குரியதில் தனக்குத் தேவையான ஏதோ ஒன்று அல்லது புணர்ச்சி இன்பம் கிடைக்காத நிலையில் அவள் மனம் படும் துயரை இந்த கவிதை விவரிக்கிறது. இக்கூற்று பெரும்பாலும் ஒரு முதிர்கன்னியின் கூற்றாக அல்லது கணவனை ஏதேனும் சூழலில் பிரிந்த ஒரு பெண்ணின் குரலாக பார்க்க முடிகிறது. கவிஞர் இந்த கவிதையில் தான் சொல்ல வரும் துயரினை மிக எளிய மொழியில் சுய வாழ்வில் தாம் தினமும் காண்கின்ற படிமம் / உவமைகளின் வழியாக காட்சிப்படுத்துகின்றார்.*

''ஸ்தூலமான அவ்விரவு ஒரு
மெழுகுவர்த்தியின் உருகுதலைப் போல்
மிக எளிமையானதாகவும்
மண் சரிந்த ஒரு சுரங்கத்தைப் போல்
மிகத் துன்பமானதாகவும்
அங்குல அங்குலமாய் நகர்கிறது
யாருக்கான இரவென்ற சந்தேகம்
வளமையான சுவர்களில் பட்டுச்
சரிந்து மடிகிறது
இரவின் சூழலில் சிக்கித்
திசைகளை துறந்த ஒரு
உள் நீச்சல்காரி போலாகின்றேன்''10

*என நீள்கிறது கவிதை. மேலும் காலம் பருவத்தின் குப்பிகளில் பகலிரவினை ஊற்றி அனுப்ப தழுவிக் கொள்ள இயலாத நீரும் எண்ணெயுமாய் சாத்தானால் ஆசிர்வதிக்கப்பட்ட பெரும்பான்மையான இரவுகள் விடிவதில்லை என்பதாக இரவு மீதான ஒரு பெண்ணின் வலியாக கவிதை செயல்படுகிறது.*

**முடிவுரை:**

*பெண்ணியம் என்பது பெண்ணின் விடுதலையை, பெண்ணுக்கான சமஉரிமையை, அதிகாரத்தைச் செலுத்தும் ஆணாதிக்கத்தைப் பற்றி பேசுவதும், செயல்படுவதும் ஆகும். இத்தகையைப் பெண்ணியச் சிந்தனைகளை கவிஞரின் மனஉணர்வுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப பல்வேறு நிலைகளாக பதிவு செய்தள்ளமையை இவ்ஆய்வின் வழி உணர முடிகிறது.*

**துணை நூற்பட்டியல்:**


1) சாரதாம்பாள்.செ – பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தாமணி, சென்னை.

2) சுகிர்தராணி – இரவு மிருகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் ஐந்தாம் பதிப்பு டிசம்பர் 2010

3) சுகிர்தராணி – அவளை மொழிபெயர்த்தல், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் மூன்றாம் பதிப்பு, நவம்பர் 2012

4) சுகிர்தராணி – தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் இரண்டாம் பதிப்பு நவம்பர் 2012

5) கமலி.தி – பெண்ணியப் படைப்பிலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தாமணி, சென்னை முதல் பதிப்பு – 2006.